IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE

(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.

DEPOSITION OF WITNESS

OS.NO. - 91/2020

P.W.1 - திரு.சிவகுமார்

DATE - 09.10.2025

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 09.10.2025.

வா.சா.1 குறுக்கு விசாரணை–

இந்த தாவா தாக்கல் செய்வதற்கு எனது தந்தைக்கு இந்து அறநிலைய துறை இணைய ஆணையர் அளித்த அனுமதி கடிதத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் என் அப்பா தாக்கல் செய்துள்ளார். அது போல் எந்த ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றும் தாவாவிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. கோவில் அறங்காவலர் குழுவும் எந்தவொரு தீர்மானமும் நிறைவேற்றி தாவா தாக்கல் செய்ய எனது தந்தைக்கு அதிகாரம் கொடுத்துள்ளார்களா என்றால் கோவிலுக்கு எனது அப்பா ஒருவர் தான் பரம்பரை அறங்காவலர். நான் தாக்கல் செய்துள்ள அறக்கட்டளை ஆவணங்கள் அதில் உள்ள விவரங்கள் எல்லாம் சரியானவை தான். வா.சா.1 அறக்கட்டளை ஆவணத்தில் சபாபதி செட்டியார், முருகப்ப செட்டியார், வெங்கசெட்டியார் ஆகியோர் அறங்காவலர் குழு என்றால் சரி. வா.சா.ஆ.2 அறக்கட்டளை ஆவணத்தில் மேறப்டி வா.சா.ஆ.1 ல் உள்ள 3 நபர்களோடு சேர்த்து நடேச செட்டியாரும் அறங்காவலர் குழுவில் உள்ளார் என்றால் சரி. சபாபதி செட்டியார், முருகப்ப செட்டியார், வெங்க செட்டியார், நடேச செட்டியார் யாரும் தற்போது உயிரோடு இல்லை. வா.சா.ஆ.1 மற்றும் 2 அறக்கட்டளை ஆவணத்தில் உள்ள அறங்காவலர் குழுவில் உள்ள 4 பேர்கள் இறந்ததற்கு பின்னிட்டு அவர்களுடைய வாரிசுகள் யார்யார் கோவிலை நிர்வகித்து வந்தார்கள் என்றால் சபாபதி செட்டியார் மகன் நடராஜன், அவரது மனைவி வசந்தா நிர்வகித்து வந்தார்கள். வா.சா.ஆ.1,2

அறங்கட்டளை ஆவணத்தில் அறங்காவலர் குழுவில் உள்ள 4 பேருடைய வாரிசுதாரர்கள் என எனது தந்தையை காண்பிப்பதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை. ஆனால் நடேச செட்டியார் மகன் சுப்பிரமணி தான் எனது அப்பா. அறக்கட்டளை ஆவணத்தில் உள்ள நடேச செட்டியார் மகன் தான் சுப்பிரமணி தான் எனது அப்பா என்பதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. நடேச செட்டியாருக்கு 2 மகன்கள், 1 பெண், தாண்டவ செட்டியார், சுப்பிரமணி செட்டியார், பூங்காவனம். அறக்கட்டளை ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நடேச செட்டியாரின் மகன் சுப்பிரமணி எனது தந்தை இல்லை என்பதால் தான் எந்தவிதமான ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. மற்ற வாரிசுகளையும் அறங்காவலராக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு இன்று 09.10.2025 தேதியில் கையெழுத்திட்டார்.

P V SANDILYAN Digitally signed by P V SANDILYAN

Additional District Judge(FTC),

Vellore.